# சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியொழுப்பும் செயற்திட்டம்-ஆக்கக்கூறு “எவ்” இன் (ரீஏஏஆர்பி – ஆக்கக்கூறு “எவ்”) 2010

## 1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய இந்த அறிக்கையின் பந்தி 3 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்து,

(அ) செயற்திட்டமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானது பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதியக் கணக்கிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) முன்னைய ஆண்டிற்கான எனது கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் ரூபா 287,988,444 ஆனதுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய செலவினம் ரூபா 1,388,599,406 ஆகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| | விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம். |
|---|---|---|---|---|
| | | 2010 | 2009 | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (அ) | சிவில் வேலைகள் | 210,229,495 | 298,359,194 | 988,446,249 |
| (ஆ) | உபகரணங்கள் | 6,148,037 | 3,897,636 | 62,838,763 |
| (இ) | மீன்பிடி உதவிகள் | 826,867 | - | 56,519,911 |
| (ஈ) | ஆலோசனை சேவைகள் | - | 3,597,746 | 61,101,399 |
| (உ) | செயற்திட்ட முகாமைத் துவமும் அதிகரிக்கும் செலவினமும் | 26,683,953 | 32,331,385 | 85,615,020 |
| (ஊ) | சுற்றாடல் முகாமைத்துவம் | - | - | 1,363,103 |
| (எ) | உள்ளூர் வரிகளும் தீர்வைகளும் | 19,484,566 | 25,838,333 | 128,773,641 |
| (ஏ) | ஆயத்தப்படுத்தும் முற்பணங்கள் | 24,615,526 | 8,252,782 | 3,941,320 |
| | மொத்தம் | 287,988,444 | 372,277,076 | 1,388,599,406 |

இந்த நிர்மாணங்களிற்கான போதிய நிதியேற்பாடுகள் செயற்திட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டில் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லையென்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிர்மாணங்கள் 2011 நொவம்பர் 30 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை.